# கலை ஒருங்கிணைந்த அமர்வுகள் -

# நான்காம் (4) வகுப்பு

**பாடம் - சுற்றுச்சூழல் கல்வி (EVS) / விஞ்ஞானம்**

**அத்தியாயம் - காட்டைச் சுற்றிச் செல்லுங்கள்**

**ஊடகம் - கைப்பாவை (பொம்மலாட்டம்)**



# அமர்வு திட்டம் -

## அமர்வு ஒன்று (1) - விலங்குகளை கூர்ந்து கவனித்து வரைதல்



ART SPARKS
CURIOSITY. CREATIVITY. LEARNING.

**இந்த அமர்வுக்கான கல்வி இலக்குகள் -**

• மாணவர்கள் காட்டில் காணப்படும் வெவ்வேறு வகையான விலங்குகளுக்கு இடையிலான வித்தியாசத்தைப் புரிந்துகொள்ளத் தொடங்குவார்கள்.

**இந்த அமர்வுக்கான கலை இலக்குகள் –**

• விலங்குகளின்படங்களை கூர்ந்து கவனிப்பதன் மூலம் மாணவர்கள் கூர்ந்த கண்காணிப்பு திறன்களை வளர்ப்பார்கள்.

**தேவையான பொருட்கள் -**

• வரைவதற்கு A4 வெள்ளை காகிதம்,

• எழுதுகோல்,

• விலங்குகளின் படங்கள்.

**செயல்பாடு -**

**அறிமுகம் நேரம் - 10 நிமிடங்கள்**

• விலங்குகளைப் பற்றிய உரையாடலை மாணவர்களுடன் தொடங்குங்கள். அவர்களைச் சுற்றியுள்ள காடு, பண்ணைகள் போன்றவற்றில் பார்க்கும் பல்வேறு விலங்கு வகைகளைப் பற்றி விவாதிக்கவும்.

• படங்களை பார்த்து, இந்த படங்களை அடையாளம் காண முடியுமா? என்று மாணவர்களிடம் கேளுங்கள்.

**செய்துகாட்டுதல் நேரம் - 15 நிமிடங்கள்**

• மாணவர்களுடன் ஒரு விலங்கின் படத்தைப் பாருங்கள்.

• அவர்களிடம் அவர்கள் எந்த விலங்கைப் பார்க்கிறார்கள்? என்று கேளுங்கள்.

• அனைத்து விலங்குகளின் படங்களும் எளிய கோடுகள் மற்றும் வடிவங்களால் ஆனவை என்று மாணவர்களிடம் சொல்லுங்கள்.

• இன்று விலங்குகளின் படங்களை கண்களைப் பயன்படுத்தி கூர்ந்து கவனிங்கள் என்று மாணவர்களிடம் சொல்லுங்கள். அவர்கள் விலங்குகளின் வெவ்வேறு வடிவங்களில் கவனம் செலுத்துவார்கள் மற்றும் விலங்குகளின் எளிய ஓவியத்தை உருவாக்க அவ்வடிவங்களை பயன்படுத்துவார்கள்.

• விலங்குகளில் வெவ்வேறு வடிவங்களை சுட்டிக்காட்டி,"இந்த விலங்கின் தலை இன்ன வடிவம்? உடல் என்ன வடிவம்? கால் என்ன வடிவம்?" என்று மாணவர்களிடம் கேளுங்கள்.

• மாணவர்கள் வெவ்வேறு வடிவங்களை சுட்டிக்காட்டும்போது, உங்கள் A4 காகிதத்தில் வடிவங்களை வரைவதற்குத் தொடங்குங்கள்.

• உங்கள் காகிதத்தில் அனைத்து வடிவங்களையும் வரைந்ததும், ஒரு விலங்கு போல தோற்றமளிக்க அவ்விலங்கிற்கு எவ்வாறு உங்களிடம் உள்ள விவரங்களைச் சேர்ப்பது என்பதை குறித்து நிரூபிக்கவும்.

**செயல்பாட்டு நேரம் நேரம் - 45 நிமிடங்கள்**

• வேலை காலத்தின் தொடக்கத்தில் விலங்கு படங்களை மட்டுமே கொடுக்கவும். மாணவர்களுக்கு விலங்குகளின் புகைப்படத்தை கவனிக்கவும், அவற்றை உருவாக்கும் வடிவங்களைப் பார்ப்பதற்கும் சில நிமிடங்கள் கொடுக்கவும்.

• இப்போது A4 தாள்கள் மற்றும் எழுதுகோலினை கொடுக்கவும்.

• வடிவங்களைப் பயன்படுத்தி ஒரு ஓவியத்துடன் தொடங்க அவர்களிடம் சொல்லுங்கள், பின்னர் விரிவான வரைதலினை உருவாக்க விவரங்களைச் சேர்க்கவும்.

**பிரதிபலிப்பு** **நேரம் - 10 நிமிடங்கள்**

• அனைவரும் கவனிக்கும்படி கலைப்படைப்புக்களை மையத்தில் வைக்கவும்.

• ஒரு குழந்தையின் கலைப்படைப்பைத் தேர்ந்தெடுத்து, மற்ற மாணவர்களிடம் அதில் பயன்படுத்தப்பட்டுள்ள சில வடிவங்கள் மற்றும் அதில் சேர்க்கப்பட்டுள்ள விவரங்களை அடையாளம் காணச் சொல்லுங்கள்.

• இந்த விலங்குகளுக்கு இடையிலான ஒற்றுமைகள் மற்றும் வேறுபாடுகளைக் கவனிக்க மாணவர்களைக் கேளுங்கள்.

ARTSPARKS
CURIOSITY. CREATIVITY. LEARNING.

**<u>அமர்வு இரண்டு (2) - அவுட்லைன் வரைதல், வெட்டுதல் மற்றும் கைப்பாவை உருவாக்குதல்</u>**



ARTSPARKS
CURIOSITY. CREATIVITY. LEARNING.

## இந்த அமர்வுக்கான கல்வி இலக்குகள் -

• மாணவர்கள் பல்வேறு வகையான விலங்குகளின் புரிதல்களைத் தொடர்ந்து வளர்த்துக் கொள்வார்கள்.

## இந்த அமர்வுக்கான கலை இலக்குகள் -

• மாணவர்கள் உடற்பயிற்சி செய்து அவர்களின் இயங்கும் திறன்களை வளர்ப்பார்கள்.

• மாணவர்கள் பல-படி திட்டத்தில் பணியாற்றுவதன் மூலம் விடாமுயற்சியை வளர்ப்பார்கள்.

• கைப்பாவிற்கு (பொம்மலாட்டத்தை) வெட்டி உருவாக்கும் போது மாணவர்கள் சிக்கல் தீர்க்கும் திறன்களை வளர்ப்பார்கள்.

## தேவையான பொருட்கள் -

• அமர்வு ஒன்று (1) இலிருந்து மாணவர்களின் வரைபடங்கள்,

• கருப்பு காகித விளக்கப்படம் (ஒரு மாணவருக்கு 1/2),

• ஆயில் பாஸ்டல்,

• கத்தரிக்கோல்,

• பசை (ஃபெவிகோல்),

• துளையிடும் கருவி,

•கைபாவின் பாகங்களில் சேர ரிவெட் / அது போன்ற பொருள்கள்,

• நீண்ட குச்சி / ஐஸ்கிரீம் குச்சிகள்.

**செயல்பாடு -**

**அறிமுகம்** **நேரம் - 5 நிமிடங்கள்**

• அமர்வு ஒன்றினை (1) மீண்டும் நினைவுப்படுத்துங்கள், இது வரை கற்பிக்கப்பட்டுள்ளததில் ஏதேனும் கேள்விகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றால் அதற்கு ஒரு அமர்வினை மாணவர்களுக்கு வழங்குக வேண்டும்.

• மாணவர்களிடம்,"ஒரு கைப்பாவை என்றால் என்னவென்று தெரியுமா? " என்று கேளுங்கள்.

• இன்று அவர்கள் கைப்பாவைகளை தானே உருவாக்குவார்கள் என்று தெரியப்படுத்துங்கள்.

**செய்துகாட்டுதல்** **நேரம் - 10 நிமிடங்கள்**

• முந்தைய அமர்விலிருந்து ஒரு மாணவர் வரைபடத்தைத் தேர்ந்தெடுக்கவும் மற்றும் மாணவர்களின் உதவியுடன் அதே வரைபடத்தை ஆயில் பாஸ்டல் பயன்படுத்தி கறுப்பு அட்டை காகிதத்தில் வரையவும்.

• நீங்கள் எவ்வாறு கவனமாக வெளிப்புறத்தை வெட்டுகிறீர்கள் என்பதை மாணவர்களுக்குக் காட்டுங்கள்.

• எவ்வாறு ஒரு முனியினை வெட்டி அதனை ஒரு ரிவெட் / அது போன்ற பொருளுடன் இணைப்பது என்பதனை செய்து நிரூபிக்கவும்.

**செயல்பாட்டு நேரம்** **நேரம் - 20 நிமிடங்கள்**

• மாணவர்கள் தங்கள் குழுவுடன் உட்கார்ந்த பிறகு, அவர்களின் கலைப்படைப்புகளை அவர்களுக்கு வழங்குக.

• அவுட்லைன் வரைய மாணவர்களுக்கு அட்டை காகிதம் மற்றும் ஆயில் பாஸ்டல் ஆகியவற்றை கொடுக்கவும்.

• அவர்கள் அவுட்லைன் வரைந்து முடிந்தபின், அந்த அவுட்லைன் மற்றும் ஒரு மூட்டு அல்லது காலை வெட்டுவதற்கு கத்தரிக்கோலாலினை வழங்கவும்.

**பிரதிபலிப்பு** **நேரம் - 10 நிமிடங்கள்**

• மாணவர்களின் வரைபடங்களை மையத்தில் வைத்து அனைவரையும் அதனை கவனிக்கச் செய்யவும்.

• மாணவர்கள் கைப்பாவை உருவாக்கும் போது அவர்கள் உணர்ந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள ஊக்குவிக்கவும்.

• அவர்கள் எதிர்கொண்ட சவால்கள் என்வென்றும், அவர்கள் எதை அதிகம் அனுபவித்தார்கள் என்பதையும் பகிர்ந்து கொள்ளட்டும்.

**<u>அமர்வு மூன்று (3) - ஆயில் பஸ்டேல் ஆய்வு (உங்கள் விருப்பம்)</u>**



ARTSPARKS
CURIOSITY. CREATIVITY. LEARNING.

**இந்த அமர்வுக்கான கலை இலக்குகள் -**

• மாணவர்கள் ஆயில் பஸ்டேல் பரிசோதனை மற்றும் ஆய்வு மூலம் விசாரணை திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**தேவையான பொருட்கள் -**

• ஆயில் பாஸ்டல் (1 பெட்டியினை 4 மாணவர்கள் பகிர்ந்துக்கொள்ளலாம்),

• கருப்பு கட்டுமான காகிதம் (1/4),

• குறிக்க உதவும் கருவிகள் (பிளாஸ்டிக் ஸ்பூன், ஃபோர்க், குமிழியுறை, ரிப்பன், நூல்கள், டூத்பிக் போன்றவை. கண்ணாடி துண்டுகள், உலோக பொருட்கள் போன்ற கூர்மையான அல்லது தீங்கு விளைவிக்கும் பொருட்கள் இல்லை என்பதை உறுதி செய்யவும்.)

**செயல்பாடு -**

**அறிமுகம் நேரம் - 5 நிமிடங்கள்**

• இன்று நாம் ஆயில் பாஸ்டல்கள் பயன்படுத்தி பணியாற்றப் போவதை மாணவர்களிடம் சொல்லுங்கள்.

• ஆயில் பாஸ்டல் மற்றும் கிரேயன்களுக்கு இடையிலான வேறுபாடு குறித்து அவர்களிடம் பேசுங்கள்.

*(க்ரேயன்கள் மெழுகினால் செய்யப்பட்டவை மற்றும் ஆயில் பாஸ்டல்கள் எண்ணெயால் செய்யப்பட்டவை. எண்ணெயின் ஒரு முக்கியமான சிறப்பியல்பு அது சரிவுகள் / வலுக்குதல் கொண்டவை. இதேபோல், ஆயில் பேஸ்டலினை காகிதத்தில் தடவும்போது அதை படரவைக்க உங்கள் விரலைப் பயன்படுத்தலாம்.அது காகிதத்தில் படர்ந்துவிடும்; இதன் மூலம் பல வண்ணங்களை கலந்து அதன் மேல் குறிக்க முடியும்.)*

**செய்துகாட்டுதல்** **நேரம் - 10 நிமிடங்கள்**

• மாணவர்களுக்கு பல்வேறு குறிகள் மற்றும் கோடுகளை பயன்படுத்தி, புதிய வண்ணங்களை உருவாக்க ஆயில் பாஸ்டல்களின் தரத்தின் ஆய்வு மூலம் எவ்வாறு வண்ணத்தை ஒன்றாகக் கலந்து உருவாக்குவது என்பதை செய்துகாட்டுக.

• மாணவர்களுக்கு குறிகள் மற்றும் கடினமான மேற்பரப்பினை ஆராய பல்வேறு கருவிகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை செய்துகாட்டுக.

• மாணவர்களிடம் அனைத்து நுட்பங்களையும் சோதிக்க தயங்க வேண்டாம் என்ற கூறுங்கள் மற்றும் புதிய விஷயங்களை அவர்கள் சிந்திக்க ஊக்குவிக்கவும்.

**செயல்பாட்டு நேரம்** **நேரம் - 20 நிமிடங்கள்**

• மாணவர்கள் தங்கள் ஆய்வுகளைத் தொடங்க தேவையான அனைத்து பொருட்களையும் வழங்கவும்.

• வகுப்பைச் சுற்றி சென்று பல்வேறு வழிகளில் பொருளைப் பயன்படுத்த அவர்களை ஊக்குவிக்கவும்.

• அவர்கள் வண்ணங்களை கலக்க தொடங்கட்டும், கலப்பதை ஆராய்ந்த பிறகு அதன் மேல் குறியிடுகளை குறிக்கட்டும்.

**பிரதிபலிப்பு** **நேரம் - 10 நிமிடங்கள்**

• மாணவர்களின் வரைபடங்களை மையத்தில் வைத்து அனைவரையும் அதனை கவனிக்கச் செய்யவும்.

• சில மாணவர்களின் ஆய்வுகளை வகுப்போடு பகிர்ந்து கொள்ளுங்கள்.

• இந்த ஆய்வுகளை பொம்மலாட்டங்களில் பயன்படுத்துவார்கள் என்று உங்கள் மாணவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

ARTSPARKS
CURIOSITY. CREATIVITY. LEARNING.

## அமர்வு நான்கு (4) – ஒரு கதையை உருவாக்கவும்



**இந்த அமர்வுக்கான கல்வி இலக்குகள் -**

• மாணவர்கள் விலங்குகளைப் பற்றிய புரிதலைத் தொடர்ந்து வளர்ப்பார்கள்.

**இந்த அமர்வுக்கான கலை இலக்குகள் -**

• மாணவர்கள் இணைந்து மற்றும் தங்கள் குழுவுடன் அவர்களின் கைப்பாவைகளுக்கு கதை உருவாக்க வேலை செய்து, தகவல் தொடர்பு திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**தேவையான பொருட்கள் -**

• ஸ்டோரிபோர்டு தாள்கள்,

• எழுதுகோல்.

**செயல்பாடு -**

**அறிமுகம் நேரம் - 5 நிமிடங்கள்**

• அமர்வு இரண்டிலிருந்து (2) மாணவர்களின் கைப்பாவைகளில் சிலவற்றை பாருங்கள்.

• இன்று தங்கள் கைப்பாவைகளுக்கு ஒரு கதையை உருவாக்குவார்கள் என்று மாணவர்களிடம் சொல்லுங்கள்.

• அவர்களிடம் அவர்களது விலங்குகள் அனைத்தும் காட்டின் ஒரு பகுதியை சேர்ந்தவை என்று கற்பனை செய்யும்மாறு கேளுங்கள் மற்றும் இதனை அவர்களின் கதைகளில் சேர்க்கவும் கேளுங்கள்.

**செய்துகாட்டுதல் நேரம் - 10 நிமிடங்கள**

• ஒரு மாணவரின் கைப்பாவை உதாரணமாக பயன்படுத்தி, மாணவர்களிடம் கீழ் காணும் கேள்விகளினை கேளுங்கள்:

- கைப்பாவையின் பெயர் என்ன?

ARTSPARKS
CURIOSITY. CREATIVITY. LEARNING.

- உங்கள் விலங்கு என்ன செய்ய விரும்புகிறது?

- அதன் விருப்பமான உணவு எது?

• குழந்தைகளிடமிருந்து உதாரணமாக கதைகளின் சில பரிந்துரைகளைப் பெறுங்கள்.

• ஸ்டோரிபோர்டை அறிமுகப்படுத்துங்கள் (எளிய படத்தையும் உரையையும் பயன்படுத்தி ஒரு கதையைச் சொல்ல பயன்படுத்துவது).

• ஸ்டோரிபோர்டை எவ்வாறு உருவாக்குவது என்பதைக் காண்பிக்க பகிரப்பட்ட கதை எடுத்துக்காட்டுகளில் ஒன்றைப் பயன்படுத்தவும்.

**செயல்பாட்டு நேரம் நேரம் - 20 நிமிடங்கள்**

• மாணவர்களுக்கு திட்டமிட 10 நிமிடங்கள் கொடுங்கள் மற்றும் அதன் பிறகு ஸ்டோரிபோர்டு தாள்களையும், எழுதுகோளினையும் வழங்கவும்.

• தங்கள் கைப்பாவைகளுக்கு ஒரு கதையைப் பற்றி சிந்திக்க சில நிமிடங்கள் எடுத்துக் கொள்ள மாணவர்களை ஊக்குவிக்கவும், மற்றும் அவர்களின் கதைகளைச் சொல்ல ஸ்டோரிபோர்டைப் பயன்படுத்தவும்.

**பிரதிபலிப்பு நேரம் - 20 நிமிடங்கள்**

• குழுக்களை அவர்களின் கதைகளை வகுப்போடு பகிர்ந்து கொள்ள ஊக்குவிக்கவும் அதேசமயம் மற்ற மாணவர்கள் காட்டைப் பார்வையிட வந்த மக்களைப் போல நடிக்கவேண்டும்.